தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.maveerarnaal.ch / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2020

**15 வயதுப்பிரிவு**
(01.01.2005 – 31.12.2006 வரையில் பிறந்தோர்)

## தாயக மக்களுக்கான வாழ்வாதாரம்

தமிழர் தாயகமான தமிழீழம் தன்னிறைவு கொண்ட வளமான நாடு. எங்கள் தாயகத்தில் போர்க்கால சூழலிலும் சீரான வாழ்வையே தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பது வரலாற்றுச் சான்று. சீர்மை பெற்ற தமிழீழ நிர்வாகத்துறை, மருத்துவத்துறை, நீதித்துறை, தமிழீழக் கல்விக்கழகம், தமிழீழ வைப்பகம், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், உற்பத்தித்துறை, விளையாட்டுத்துறை, போக்குவரத்துக் கழகம் போன்ற அனைத்துத் துறைகளும் கட்டமைக்கப்பெற்று, ஒரு நாடு எப்படி இருக்கவேண்டும் என்பதைத் தமிழீழ நிழல் அரசு மூலம் நடாத்திக்காட்டினார் எம் தலைவர் மாமா.

இந்நிலையில் கடந்த 2009 இற்குப் பின்னரான தமிழர் வாழ்வு என்பது மிக நுண்மையாக ஆராயப்பெற்று கட்டியமைக்கப்பெற வேண்டியது. எம் உறவுகளின் வாழ்வாதாரம் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டு வருகின்றது. போர் ஓய்ந்த பின்னும் போராடிக்கொண்டிருக்கும் எம் உறவுகளின் வாழ்வு மேம்பட வேண்டும். அவர்களுக்கான வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புகின்ற பெரும் பொறுப்புக்குரியவர்கள் நாங்களே! எம் தாயக உறவுகளின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப எம்மால் முடியும் என்பதை நிலைநிறுத்த வேண்டியவர்களாகப் புலம்பெயர்ந்த உறவுகளாகிய நாம் இருக்கிறோம். இங்கு வாழ்கின்ற ஒவ்வொரு குடும்பமும் தாயகத்தில் வாழும் ஒரு குடும்பத்தின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப முன்வருவோமானால் எல்லா இடர்களிலிருந்தும் எம்மால் மீண்டெழ முடியும்.

எம் தாயகத்தில் பேரிடர் எது வரினும், அள்ளிஅள்ளிக் கொடுக்கும் தாய்தந்தையரைக் கொண்ட தலைமுறை நாம். கேட்கும் போதெல்லாம் அன்றாட தேவையை மனதில் இருத்தி பணமாகவோ பொருளாகவோ கொடுத்து வாழ்வாதாரத்திற்கு வழிசமைத்தவர்கள். அவர்கள் வழிவந்த நாம் என்ன செய்யப்போகிறோம்? “பசித்தவனுக்கு மீனை உண்ணக் கொடுப்பதை விட மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பதே சிறந்தது” என்கிறது சீனப்பழமொழி. அன்றாடம் என்பதை விடுத்து, எதிர்காலம் மிளிர வகை செய்வோம். தாயகத்தில் போரின் வடுக்களைத் தாங்கி உடலிலும் உள்ளத்திலும் புண்பட்டு நிற்கும் எம்மக்களுக்குப் புலம்பெயர்ந்து வாழும் இளையோர் நாமும் கைகொடுப்போம்.

கற்பதற்காய் காத்திருக்கும் எம் உறவுகளின் கல்விக்கான தேவைகளை நிறைவாக்குவோம். பொருண்மியம் மேம்பட பொறுப்புள்ளவராய் நாம் மாறுவோம். விவசாயம் காத்திட விதை நெல்லாய் நாம் இருப்போம். கடல் வளங்களை எங்களின் மக்களின் வாழ்வாதாரத்திற்கான வழிகளாக்குவோம். அவ்வாறே, ஏனைய தொழில்களும் ஏற்றம் பெற ஏணியாய் மாறி நிற்போம்.

இத்தனையும் இயல்பாய் நடக்க இக்கணமே ஒன்றுபடுவோம். ஒற்றைக் காசு கொடுப்பினும் ஒற்றுமையாய் ஓரணி நிற்போம். “உங்கள் வாழ்வுக்கு ஆதாரமாய் நாமிருப்போம்” என நம் உறவுகளுக்கு நம்பிக்கையளித்து, தலைவர் மாமாவின் சிந்தனைகளைச் செயலாக்குவோம். எமது தாய்நாட்டின் எல்லா வளங்களும் எங்களுக்கானவை என்பதில் உறுதிகொள்வோம்.

நன்றி,
வணக்கம்.